1975 எப்ரல் 8]

திரு. கே. என். குமாரசாமி : மாணவ மாணவியர் சேர்ந்து படிக்கிற பள்ளிகளில் கல்வீயின் தரம் உயர்ந்திருக்கிறதா ? அல்லது தனித் தனி யாக படிக்கிற பள்ளிகளில் உயர்ந்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதில் இரண்டு வித மான கருத்துக்கள் உண்டு. எதுவுமே, மாணவர்களுடைய மனத் திடத்தையும் மனதைக் கட்டுப்படுத்துகின்ற தன்மையையும் பொறுத்து இருக்கிறது. இணைந்து படித்தால் அதிகமாக அறிவு வளருகிறது என்பது உலகில் ஒரு சாரார் கருத்து. தனித் தனியாகப் தான் இருக்க வேண்டு மென்பது மற்றொரு சாராரின் கருத்து.

திரு. பெ. சீனிவாசன் : அமைச்சரின் பதிலிலிருந்து என் கேள்வி எழுகிறது. அருகில் ஏற்படுத்த விரும்பும் பள்ளிகளுக்கு அனுமதி தர மாட்டேன் என்ற அமைச்சர் கூறுகிறார். அந்தக் கொள்கைக்கு விரோத மாக மல்லான் கிணறு என்ற ஊரில் எம். எஸ். பி. ராஜா ஒரு பள்ளி கட்டியிருக்கிறார்கள். ஏற்கெனவேயே இருக்கக் கூடிய பள்ளியை இது பாதித்திருக்கிறது. இந்த ஜூன் மாதத்தில் அதற்குக் கொடுக்க வேண்டிய டெம்பரரி ரிகக்னிஷனை ரதது செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாணவர்கள் சேர்க்கப் பட்டு பள்ளிக் கூடம் நடந்துகொண்டிருக்கிறபடியால், அந்தப் பள்ளிக் கூடம் தொடர்ந்து நடக்கட்டும் என்று விட்டு வைக்கப்பட்டிருக்கிறது.

நடு நிலைப் பள்ளிகளில் விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள்.

*583 வினா—திரு. வி. ஆலடி அருணா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) ஐநூறுக்கு மேல் எண்ணிக்கை உள்ள நடு நிலைப் பள்ளிகளில் விஞ்ஞான ஆய்வுக் கூடம் திறந்திட அரசிற்கு உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தமிழ் நாட்டில் இருக்கிற பள்ளிக் கூடங்களில் பல இடங்களில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் இல்லாமல் இருக்கின்றன. இந்தக் குறையைப் போக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் இது வரையில் 810 உயர் நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் சாதனங்கள் வாங்கவும் ஆய்வுக் கூடக் கட்டடங்களுக்கு உதவி மானியமாகவும் அளிக்கப்பட்டுள்ளன. 1974–75–ஆம் ஆண்டில் மேலும் 55 உயர் நிலைப் பள்ளிகளுக்கு இம்மானியம் வழங்கப்படும். மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான எல்லா அறிவியல் கருவிகளும் கொண்டுள்ள 17 ஆய்வுக் கூட இயல் ஊர்திகள் இயங்குகின்றன. மேலும் 8 ஊர்தி வண்டிகள் 1975–76–ம் ஆண்டில் வாங்கப்படும்.

நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு அவசியமான முறையில் விளக்கம் அளிக்கும் பொருட்டு சில அறிவியல் சாதனங்கள் வாங்குவதற்காக தொடக்கப்பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 1,000 வழங்குவது என்ற அடிப்படையில் அறிவியல் சாதனங்களும் ஏனைய கல்விச் சாதனங்களும் வழங்கும் திட்டம் 1960-ல் தொடங்கப்பட்டது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 11,400 தொடக்கப்பள்ளிகளும் 3,000 உயர் தொடக்கப்பள்ளிகளும் பயன் அடைந்துள்ளன. 1975–76–ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தின் கீழ் 1,220 தொடக்கப்பள்ளிகளும் 334 உயர்தொடக்கப்பள்ளிகளும் பயன் பெறும்.

### நொய்யல் நீர்த் தேக்கத் திட்டம்.

*584 வினா— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கரூர் தாலுக்காவில் நொய்யல் நீர்த்தேக்கத் திட்டம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இத் திட்டத்திற்கான விரிவான ஆய்வு தலப் பொறியாளர்களால் நடத்தப்பட்டு வருகிறது.

### *Silt excluder in Grand Anicut.*

*585 *Q.*—THIRU G. ILANGOVAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to put up a silt excluder at the head reach of Grand Anicut channel ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) நீரியல்-நீர்ப் பண்பியல், பூண்டி நிறுதனத்தில் மாதிரி ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. பெ. சீனிவாசன் : தமிழ் நாட்டில் இருக்கிற ஏரிகளில் இன்னும் சில்ட் கிளியரன்ஸ் தொடங்கப்படவில்லை. அரசாங்கம் இதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யுமா ?